Paper ID: IL01

# இலங்கையில் இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்ட நடைமுறை - களுத்துறை முஸ்லிம் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**M.S.F Nisfa[1] & S.M.M Mazahir[2]**

[1] B.A Honors Degree Holder in Islamic Law at South Eastern University of Sri Lanka.

[2]Senior Lecturer in Islamic Studies, South Eastern University of Sri Lanka.

amna7201@gmail.com, mazahirsmm@seu.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதனைப் படைத்த அல்லாஹ் அவனுக்கான அனைத்து வழிகாட்டல்களையும் தன் வேதங்கள் மற்றும் வேதக் கட்டளைகள் மூலம் வழங்கியுள்ளான். அவற்றுள் மிக முக்கியமானதொரு பகுதியாக இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தை நாம் காணலாம். மிகவும் அழகாகவும் தெளிவாகவும் அவன் தன் திருமறையிலே அதனை விளக்கியிருப்பது முஸ்லிம்கள் அதனை ஏற்று நடப்பதற்காகவேயாகும். அல்லாஹுத்தஆலா இன்னாருக்கு இன்ன பங்கு என்ற அடிப்படையில் பாகப்பங்கீட்டை விளக்கியுள்ளதுடன் இது மீற முடியாத அல்லாஹ்வின் கட்டளைகள் என அவனே அவனது திருமறையில் குறித்துக் காட்டியுள்ளான். இந்த அவனது கட்டளையை மீறுவதன் பாரதூரத்தை மிகப் பயங்கரமான வசனங்களுக்கூடாக சுட்டிக் காட்டியுள்ளான். ஸூறா அன்னிஸாவின் 11 மற்றும் 12ஆம் வசனங்கள் இதனைத் தெளிவாக விளக்குகின்றன. ஆனபோதிலும் முஸ்லிம் சமூகமானது அது தொடர்பாக அறியாதவர்களாக, அறிந்தும் அதனைப் புறக்கணிப்போராக இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. களுத்துறை வாழ் முஸ்லிம்களிடத்தில் இது பற்றிய தெளிவையூட்டி, இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் தமது சொத்துப் பிரிப்பை மேற்கொண்டு ஈருலகிலும் வெற்றிபெறுவது அவசியமாகும். இவ்வாய்வானது முதற்தர தரவுகளான நேர்காணல், அவதானம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வுப் பிரதேசத்தில் சொத்துப் பிரிப்பின்போது பொதுவாக ஆண்கள் அநீதிக்கு உட்படுத்தப்பட்டிருப்பதனையும் பெரும்பாலும் பெண்பிள்ளைகள் மாத்திரமே சொத்து வழங்கப்பட்டிருப்பதனையும் காணக்கூடியதாக உள்ளது. இந்நிலையினை சீர்செய்வதற்காக இஸ்லாமிய வாரிசுரிமை சட்டம், அதன் அவசியம் மற்றும் முக்கியத்துவம் என்பன எல்லா மட்டத்திலும் துறைசார் உலமாக்கள், சட்டத்தரணிகளின் துணைகொண்டு விளக்குதல், இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தின் அடிப்படையிலான முன்மாதிரி குடும்பங்கள் உருவாக்கப்படுதல் என்பன போன்ற இன்னும் பல விதந்துரைகள் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்:-** இஸ்லாமிய சட்டம், களுத்துறைவாழ் முஸ்லிம்கள், வாரிசுரிமை, சொத்துப் பங்கீடு

## 2. அறிமுகம்

முஸ்லிம் சமூகமானது அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து வாழ வேண்டும் என்பதே அல்லாஹ்வினதும் ரஸூலினதும் அவாவாக உள்ளது. மனிதன் நேர்வழி பெறுவதற்காக அல்லாஹ் காலத்துக்குக் காலம் நபிமார்களையும் ரஸூல்மார்களையும் அனுப்பி வைத்து, அவர்களின் ஊடாக தன் வேதங்களையும் வேதக்கட்டளைகளையும் இறக்கி வைத்துள்ளான். இவ்வகையில் குர்ஆனும்,

நபியவர்களது வாழ்க்கை வழிமுறைகளும் எமக்கான நேர்வழிகாட்டல்களாக உள்ளன. வாழ்வின் அனைத்து துறைகளுக்குமான வழிகாட்டல்களை அவை தன்னுள் கொண்டுள்ளன.

இவ்வகையில் அவற்றினூடாக அல்லாஹ் மனிதனை உழைக்குமாறு பணித்ததுடன் அதற்கான வரையறைகளை விதித்தது மாத்திரமன்றி, அவன் உயிரோடு இருக்கும்போது அதனை எவ்வாறு செலவளிக்க வேண்டும் என்பது பற்றியும், அவன் இறந்த பின்னர் அவனது சொத்துக்கள் எவ்வாறு பகிரப்பட வேண்டும் என்பது பற்றியும் விளக்கியுள்ளான். இவ்வகையில் சொத்துக்கள் பகிரப்பட வேண்டிய ஒழுங்குகள் தொடர்பாக அல்லாஹ் விதித்த சட்டங்களே இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டங்கள் எனப்படுகின்றன.

மனிதனது இறப்பின் பின்னர் அவனது சொத்துக்கள் அவனது வாரிசுகளுக்கு மத்தியில் நீதமாக பகிரப்பட வேண்டும் என்றே அல்லாஹ் விரும்புகின்றான். நீதமான முறையில் சொத்துக்கள் பிரிபடாமையால் இன்று பல குடும்பங்களில் குழப்பங்கள் உருவாகி சில வேளைகளில் அவை பாரிய முரண்பாடுகளில் சென்று முடிவடைகின்றன. இதனாலேயே அல்லாஹ் இதனை மிகவும் வலியுறுத்திக் கூறியுள்ளான்.

களுத்துறை முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தளவில் அவர்களிடத்தில் மிகவும் அறிமுகமில்லாத, நடைமுறையிலில்லாத பகுதியாக இந்த வாரிசுரிமைச் சட்டங்கள் காணப்படுகின்றன. இதனால் அவர்கள் தமது விருப்பத்தின்பேரில் தமது வாரிசுகளுக்கு மத்தியில் சொத்துக்களைப் பங்கீடு செய்வதை நாம் காணக்கூடியதாக உள்ளது. அத்துடன் இஸ்லாத்துக்கு மாற்றமான முறையில் பெண் பிள்ளைகளுக்கு அதிகமாக சொத்து வழங்குவதனையும், சொத்துப் பங்கீட்டின்போது பெரும்பாலும் ஆண்கள் புறக்கணிக்கப்படுகின்றமையையும் காணமுடிகின்றது.

அத்துடன் சொத்துரிமையாளர் தனது இறப்பிற்கு முன்னரே தமது வாரிசுகளுக்கு சொத்தைப் பிரித்துக் கொடுக்கும் நிலையை நாம் காணலாம். சொத்துரிமையாளரின் இறப்பின் பின்னரே சொத்துக்கள் அவரது வாரிசுகளுக்கு மத்தியில் இயல்பாக பிரிபடுகின்றது என்பதை அவர்கள் அறியாமல் உள்ளனர். சிலர் அறிந்தும் அதனை நடைமுறைப்படுத்தத் தவறுகின்றனர்.

இவ்வாறான நிலைமைகள் மிகவும் பிழையானவை. இதனால் களுத்துறை மாவட்ட முஸ்லிம் சமூகத்தினரிடத்தில் ஏன் இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தின் அடிப்படையில் சொத்துப்பிரிவு இடம்பெறவில்லை என்பதை ஆராய்ந்து அதற்கான ஆலோசனைகளை முன்வைப்பதாகவே இவ்வாய்வு அமைந்துள்ளது.

**3. ஆய்வுப் பிரச்சினை**

களுத்துறை மாவட்ட முஸ்லிம் சமூகத்தில் இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தின் அடிப்படையில் சொத்துப் பிரிப்பு இடம்பெறுவதில்லை. அதற்கான காரணங்களைக் கண்டறிதல் வேண்டும்.

**4. ஆய்வு முறை**

இந்தப் பண்புசார் ஆய்வுக்கான தகவல்கள் இரு வழிமுறைகளில் சேகரிக்கப்பட்டன.

**(அ) அவதானம்**

ஆய்வுப் பிரதேசத்தில் நீண்ட காலம் ஆய்வாளர்கள் வசித்துள்ள நிலையில் அவதானிக்கப்பட்ட விடயங்களின் தொகுப்பாகவே இது அமைந்துள்ளது.

**(ஆ) நேர்காணல்**

ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள புத்திஜீவிகளிடமும் சமூகத் தலைவர்களிடமும் இது தொடர்பாக நேர்காணல் செய்து பெற்ற தகவல்களும் இதற்கு உதவின.

இவ்வாறு முதற்தர தரவுகளை (Primary) கொண்டு இவ்வாய்வு வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் பெறப்பட்ட தகவல்களை மையமாகக் கொண்டு இஸ்லாமிய சட்டங்கள் மற்றும் தற்கால முஸ்லிம் சமூகத்தினது சொத்துப் பங்கீடு தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டது. களுத்துறை பிரதேச முஸ்லிம்களை இத்தவறான நிலையிலிருந்து மீட்டெடுப்பதற்காக எவ்வாறான ஆலோசனைகளை வழங்கலாம் எனவும் நோக்கப்பட்டது. அதன் அடிப்படையில் பெறப்பட்ட சில முன்மொழிவுகள் இறுதியில் முன்வைக்கப்பட்டுள்ளன.

**5. ஆய்வின் இலக்குகள்**

- இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தின் அடிப்படையில் களுத்துறை பிரதேச முஸ்லிம்களிடத்தில் சொத்துப் பிரிவு இடம்பெறாமைக்கான காரணங்களைக் கண்டறிதல்.
- இஸ்லாமிய சட்டத்திற்கு அமைவாக அதனை மாற்றியமைப்பதற்கான வழிவகைகளை பரிந்துரைத்தல்.

**6. சொத்துப் பங்கீடு தொடர்பில் களுத்துறை மாவட்ட முஸ்லிம்களின் நிலைப்பாடு**

வாழ்வின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் வழிகாட்டும் இஸ்லாம் வாரிசுரிமை பற்றியும் மிகத் தெளிவானதொரு வழிமுறையைக் காட்டியுள்ளது. பல்வேறு வழிமுறைகளில் பொருளை அடைய முடிந்தாலும் அதை ஈட்டுவதற்கான சிறந்த வழி எது? அதை எந்தெந்த வகைகளில் செலவிட வேண்டும் என்பன போன்ற வினாக்களுக்கு பொருளியல் நிபுணர்களே வியந்து பாராட்டும் வண்ணம் எக்காலத்திற்கும் பொருத்தமான தீர்வை இஸ்லாம் வழங்கியுள்ளது. அதேபோல பொருளாதாரம் ஓரிடத்தில் குவிந்து சிலர் என்றும் பொருளாதார வசதி படைத்தோராகவும் சிலர் என்றுமே வறியவர்களாகவும் இருக்கும் நிலையை இஸ்லாம் அனுமதிப்பதில்லை.

ஆயினும் களுத்துறை முஸ்லிம் சமூகமானது இதனை முற்று முழுவதுமாக புறக்கணிப்பதாக காணப்படுகின்றது. அதாவது இங்கு முஸ்லிம்கள் இஸ்லாமிய வாரிசுரிமை சட்டம் பற்றிய அறிவு அற்றோராகவும், தமது இறப்பிற்கு முன்னரே சொத்துக்களை வாரிசுகளுக்கு பிரித்துக் கொடுப்பவர்களாகவும், பெண்பிள்ளைகளுக்கு அதிக சொத்து வழங்குவோராகவும், ஆண்பிள்ளைகளை பெரும்பாலும் புறக்கணிப்பவர்களாகவும், தமது விருப்பத்தின்பேரில் சொத்துப் பங்கீடு செய்வோராகவும், வஸிய்யத் தொடர்பாக அறிந்திருந்தபோதிலும் அதனை நடைமுறைப்படுத்தாதோராகவும் காணப்படுகின்றனர்.

**7. இஸ்லாமிய வாரிசுரிமை சட்டத்தின் அடிப்படையில் களுத்துறை மாவட்ட முஸ்லிம் சமூகத்தில் சொத்து பிரிக்காமைக்கான காரணங்கள்**

களுத்துறை மாவட்ட முஸ்லிம் சமூகத்தினரிடத்தில் இஸ்லாமிய வாரிசுரிமை சட்டத்தின் அடிப்படையில் சொத்து பிரிக்காமைக்கான காரணங்களாக பலவற்றைக் கூறலாம்.

### 7.1 இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டம் பற்றிய தெளிவின்மை

களுத்துறை மாவட்ட முஸ்லிம் சமூகமானது இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தின் அடிப்படையில் சொத்து பிரிக்காமைக்கான அடிப்படைக் காரணம் அது பற்றிய தெளிவின்மை ஆகும். அதாவது இஸ்லாத்தின் ஏனைய கடமைகளான தொழுகை, நோன்பு, ஹஜ் என்பன தொடர்பாக பாமரனும் அறிவான். ஆனால் இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டம் பற்றிய அறிவு பரவலாக முஸ்லிம்களிடம் இல்லை என்றே கூறலாம்.

களுத்துறை பிரதேச முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் பெரும்பாலும் அவர்கள் எழுத வாசிக்கத் தெரிந்தவர்கள். இவர்களில் மார்க்கம் கற்றோரும் பலர். இவர்களில் பலர் கல்வித் தகைமையினாலும் கடின உழைப்பினாலும் தொழிற்தகைமையினாலும் சமூகத்தில் உயர் அந்தஸ்தில் வைத்து நோக்கப்படுகின்றனர். ஆயினும் அவர்களில் சிலர் இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டம் பற்றிய அறிவை மிகவும் குறைவாகவே கொண்டுள்ளனர்.

### 7.2 இஸ்லாமிய வாரிசுரிமைக் கல்வியின் முக்கியத்துவம் உணரப்படாமை

அடுத்த முக்கிய காரணமாக இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தின் முக்கியத்துவம் அவர்களால் உணரப்படாமல் உள்ளமையைக் கூறலாம். இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டமானது எந்தளவு முக்கியத்துவம் வாய்ந்தது, எந்தளவு சிறந்தது என்பன போன்ற விடயங்கள் அவர்களால் அறியப்படுவதில்லை. இஸ்லாம் கூறும் சட்டத்தின்படி வாரிசுகள் மத்தியில் சொத்து பிரிப்பதனால் சமூகத்தில், குடும்பத்தில் தோன்றும் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம் என்ற விடயம் அவர்களுக்கு தெரியாமல் உள்ளது. அத்துடன் இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தாமல் விடுபவனுக்கு அல்லாஹ் மறுமையில் வழங்கும் தண்டனையும் அவர்களால் இன்னும் உணரப்படவில்லை.

### 7.3 வாரிசுரிமைச் சட்டம் நுட்பமான கணித சட்டவிதிகளை கொண்டுள்ளமை

இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டமானது மிக நுட்பமான கணித சட்ட விதிகளைக் கொண்டு அமையப் பெற்றுள்ளதனால் அந்த பாடமானது கடினம் என்ற மனநிலையே கற்கும் மாணவர்கள் மத்தியில் காணப்படுகின்றது. இதனைக் கஷ்டமான ஒரு விடயமாகவே அவர்கள் நோக்குகின்றனர். அதனாலேயே இது விடயத்தில் உலமாக்கள் கூட தடுமாறி நிற்பதைப் பார்க்கலாம். யாராவது ஒருவர் இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தின்படி இன்ன ஆளுக்கு என்ன பங்கு வழங்கப்பட வேண்டும் என கேள்வி எழுப்பும் சந்தர்ப்பத்தில் மார்க்கம் கற்ற உலமாவும் தடுமாறி விடுகின்றார். காரணம் அவர்களே இது விடயத்தில் அதிகம் ஈடுபாடு காட்டாதவர்களாக உள்ளனர்.

பொதுவாக இஸ்லாமிய வாரிசுரிமை தொடர்பாக கற்றோர் தாம் கல்வி கற்கும் காலத்தில் மட்டுமே அதனை ஒரு பாடமாகக் கற்றிருப்பர். பரீட்சையின் பின்பு அது அப்படியே மறக்கடிக்கப்பட்டிருக்கும். இதனாலேயே அவர்களது சொத்து ளபிரிப்பின்போது முஸ்லிம்களாகிய நாம் இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தின் அடிப்படையில் சொத்து பிரிக்க வேண்டும் என்ற விடயத்தை மறந்து விடுகின்றனர்.

### 7.4 மார்க்க உணர்வின்மை

அடுத்த முக்கிய காரணம் என்னவெனில் பலருக்கு இஸ்லாமிய ரீதியில் சொத்து பிரிப்பதில் உடன்பாடு இல்லை. ஏனெனில் சொத்து பிரிப்பின்போது இறந்தவரது பிள்ளைகள் மட்டுமன்றி ஏனையோரும் பங்கு

பெறுவர். ஆகவே, தனது பங்கு குறைவடையும் என சுய நலமாக எண்ணுபவர்கள் இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தின் அடிப்படையில் சொத்து பிரிப்பதை விரும்புவதில்லை. இதற்கான காரணம் மார்க்க ரீதியான உணர்வு அவர்களிடத்தில் மிகக் குறைவாக உள்ளமையாகும்.

### 7.5 ஈமானியப் பலவீனம்

அது தவிர மார்க்கத்தில் தெளிவுள்ளோரும் இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தின் அடிப்படையில் சொத்து பிரிக்க விரும்புவதில்லை. இதற்கான காரணம் அவர்களது ஈமானியப் பலவீனம் ஆகும். இவ்வாறு மார்க்கத்தில் தெளிவிருப்போர் இஸ்லாத்தின் அடிப்படையில் சொத்து பிரிக்காமைக்கான காரணமாக உடனடியாக அவர்களுக்கு இஸ்லாத்தின்படி பிரிப்பதற்கான மனோநிலை இன்மையை கூறலாம். இதுவரை யாருமே ஷரீஆ சட்டத்தின் அடிப்படையில் தமது சொத்துக்களைப் பிரிக்கவில்லை. தான் அவ்வாறு செய்வதால் தனது பிள்ளைகளுக்கு நட்டம் ஏற்பட்டு விடுமோ எனப் பயப்படுபவர்கள் அவ்வாறு செய்ய விரும்புவதில்லை. மேலும் இன்ன பிற சுயநலமான காரணங்கள் அவர்களை இஸ்லாமிய ரீதியில் சொத்து பிரிக்க விடாமல் கட்டிப் போட்டு விடுவதையும் நாம் காணலாம்.

### 7.6 எமது நாட்டின் கலாசாரம்

மேலும் எமது நாட்டின் கலாசாரமும் இதற்கான முக்கிய காரணமாக அமைந்து விடுகின்றது. அதாவது எமது நாட்டில் பொதுவாக முஸ்லிம்கள் உயிரோடு இருக்கும்போதே சொத்துக்களைப் பிரித்து விடும் நிலையே காணப்படுகின்றது. ஒருவர் இறந்த பின்பே வாரிசுரிமை வரும் என்ற விடயம் அவர்களால் அறியப்படுவதில்லை.

அவர்கள் உயிரோடு இருக்கும் பொழுதே அன்பளிப்பு எனும் பெயரில் தமது பிள்ளைகளுக்கு சொத்து வழங்கி விடுகின்றனர். அதிலும் பெண் பிள்ளைகளுக்கு அதிகம் வழங்கி விடுகின்றனர். அதற்கான முக்கிய காரணம் திருமணம் ஆகும். திருமணம் பேசும் சமயத்திலேயே இன்ன சொத்து தருவோம் என கூறியே மாப்பிள்ளை பேச வேண்டியுள்ளது. தற்காலத்தில் சீதனத்திற்கெதிரான பேச்சு, எழுத்துக்கள் காரணமாக சீதனம் எனும் அம்சமானது சமூகத்தில் வெகுவாக குறையத் துவங்கியுள்ளது. ஆனால் இன்னும் ஒழியவில்லை. கட்டாயம் பெண்ணுக்கு நகை போட வேண்டியுள்ளது. இவ்வாறு பெண்ணின் திருமணத்தின்போது சொத்தை வழங்கி விடுவர். அதன் பின் மரணத்தின் பின்னர் பிரிக்க சொத்து இருப்பதில்லை.

### 7.7 முஸ்லிம் சமூகத்தில் உள்ள சிந்தனைச் சிக்கல்கள்

மேலும் இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தின் அடிப்படையில் சொத்து பிரிக்காமைக்கு அடுத்த முக்கிய காரணம் என்னவெனில் முஸ்லிம் சமூகத்தில் உள்ள சொத்தோடு சம்பந்தப்பட்ட சிந்தனைச் சிக்கல்கள் ஆகும். அதாவது வஸிய்யத், ஹிபா, வாரிசுரிமை என்பன தொடர்பாக தெளிவில்லாத நிலைமையில் அவர்கள் இருப்பதை நாம் காணலாம். அதாவது இஸ்லாமிய பரிபாஷையில்,

- ✓ வஸிய்யத்:- ஒருவர் மரணிக்க முன்பு தனது மரணத்தின் பின்னர் தனது இந்த சொத்து இன்ன ஆளுக்கு அல்லது நிறுவனத்திற்குச் சேர வேண்டும் என எழுதி வைப்பார். ஒருவர் தனது வாரிசுதாரர்களுக்கு வஸிய்யத் செய்ய முடியாது. வாரிசு அல்லாதோருக்கே வஸிய்யத் செய்யலாம். அத்துடன் வஸிய்யத் செய்யப்பட்டவருக்கான அச்சொத்தின் மீதான உரிமை சொத்துடைமையாளர் இறந்த பின்பே உரிமையாகும்.

- ✓ ஹிபத்:- அன்பளிப்பு எனும் விடயத்தையே இது குறிக்கும். அதாவது ஒருவர் இன்ன ஆளுக்கு இன்ன சொத்தை அன்பளிப்பாக வழங்குகிறேன் என எழுதிய உடனே அது உரிமை மாற்றம் செய்யப்பட்டு விடும்.
- ✓ வாரிசுரிமை:- இது ஒருவரது மரணத்தின் பின்னர் அவரது வாரிசுகள் குர்ஆனில் கூறப்பட்டுள்ள பங்கு விகிதத்தில் அவரது சொத்தில் சொத்து பெறுவதற்கான உரிமை ஆகும்.

ஆனால் எமது சமூகத்தில் இம்மூன்று விடயங்கள் தொடர்பிலும் தெளிவின்மை பரவலாக காணப்படுகின்றது. இவ்வாறான காரணங்களினால் எமது சமூகமானது இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் உள்ளனர்.

### 8. இஸ்லாத்தின் அடிப்படையில் சொத்து பிரிக்காமையின் விளைவுகள்

இஸ்லாம் பொதுவாக முழு வாழ்வுக்கும் வழிகாட்டி, வாழ்வின் அனைத்து துறைகளுக்குமான சட்டங்களை வழங்கியபோதிலும் குறிப்பிட்ட சில துறைகளுக்கு கூடிய கரிசனை செலுத்தி மிகவும் விரிவான சட்டங்களை வழங்கியுள்ளது. நம்பிக்கைகளோடு தொடர்பான விடயங்கள், குடும்ப வாழ்வோடு தொடர்பான நிகாஹ், தலாக், வாரிசுரிமை போன்ற பகுதிகளுக்கு மிகவும் தெளிவாக கருத்து வேறுபாடுகளுக்கு இடமளிக்காது சட்டங்களை விளக்கியுள்ளது.

இவ்வகையில் வாரிசுரிமை தொடர்பாக அல்லாஹ் மிகவும் வலியுறுத்திக் கூறியிருப்பினும் எமது நாட்டில் 1931ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க சொத்துறுதியற்ற வாரிசுரிமைக் கட்டளைச் சட்டமானது முஸ்லிம்களின் சொத்துக்கள் விடயத்திலான சட்டமாக இருப்பினும் எமது முஸ்லிம் சமூகமானது அது விடயத்தில் கரிசனை அற்றோராக உள்ளனர். அதாவது இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தைப் பின்பற்றுபவர்கள் நடைமுறையில் மிகக் குறைவு. அதாவது இலங்கையைப் பொறுத்தவரையில் அனைவருக்கும் ஏற்ற பொதுவான சட்டமாக விருப்பாவணச் சட்டமானது காணப்படுகின்றது. அதாவது சொத்துரிமையாளராகிய ஒருவர் இறக்கும்போது அவரது சொத்துக்கள் முழுவதையும் விருப்பாவணக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் ஒருவருக்கு வழங்கலாம். ஆனால் ஷரீஆ சட்டத்தின் அடிப்படையில் இவ்வாறு ஒரு முஸ்லிம் செய்ய முடியாது. தனது சொத்தில் மூன்றிலொரு பாகத்தையே வஸிய்யத் செய்யலாம்.

அத்துடன் சொத்து விடயத்தில் வாரிசுகளுக்கு மத்தியில் குழப்பங்கள் ஏற்படின் அது நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டால் இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தின் அடிப்படையிலேயே அச்சொத்து பிரிப்பு மேற்கொள்ளப்படுகின்றமையை நாம் காணலாம்.

இவ்வாறு இஸ்லாத்தின் அடிப்படையில் சொத்துப் பிரிப்பு மேற்கொள்ளப்படாமையினால் பின்வரும் விளைவுகளை நாம் காணக்கூடியதாக உள்ளது.

#### 8.1 ஆண்களின் பொருளாதார பின்னடைவுகள்

பெண்பிள்ளைகள் மட்டுமே பெரும்பாலும் சொத்து வழங்கப்படுகின்றமை நமது அன்றாட வாழ்வில் நாம் காணும் உண்மையாகும். சிலவேளைகளில் சொத்துரிமையாளருக்கு கடைகள், வாகனங்கள் இருந்தால் மட்டுமே ஆண் அதனைப் பெறுகின்றான். ஆயினும் அதிக இடங்களில் புறக்கணிக்கப்படுபவனாகவே உள்ளான். இதனால் ஆண்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளமையை நாம் காணலாம். மேலும் இதனால் ஆண்கள் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ளமையையும் நம்மால் அவதானிக்க முடிகின்றது.

### 8.2 குடும்ப அங்கத்தவர்களுக்கிடையிலான பிரச்சினைகள்

பெரும்பாலும் வாரிசுகளுக்கு மத்தியில் இத்தகைய சொத்துப் பிரிப்பில் திருப்தியற்ற நிலையே காணப்படுகின்றது. மேலும் இதனால் குடும்பங்களுக்கு மத்தியில் ஒற்றுமையின்மை, குரோதம், வஞ்சகம் என்பவற்றுக்கு வழிவகுக்கின்றது. மேலும் சொத்துப் பிரிப்பில் பாதிக்கப்பட்டோர் சண்டை சச்சரவுகளின் மூலம் அதனை அடைய முயற்சிப்பதனால் சில வேளைகளில் அவை கொலையில் கூட சென்று முடிவடைகின்றது.

### 8.3 சீதனம்

ஆண்பிள்ளைகளுக்கு சொத்து வழங்கப்படாமையினால் அவன் நிர்க்கதியற்று சீதனம் வாங்கி திருமணம் முடிக்கும் நிலைக்கு தள்ளப்படுகின்றான். இது ஒரு பாரிய சமூக ரீதியான பிரச்சினையாகும். இதனால் சில வேளைகளில் சீதனம் வாங்கி திருமணம் செய்தவன் என்ற கண்ணோட்டத்தில் சமூகத்தின் ஏளனத்திற்கு உட்பட்டு விடுகின்றான். மேலும் சீதனம் வழங்க வேண்டிய கட்டாயத்தின்பேரில் பெண்ணைக் பெற்றோரும் பொருளாதார ரீதியான நெருக்கடிகளுக்கு தள்ளப்படுகின்றனர்.

### 8.4 கணவன் மனைவியருக்கிடையிலான பிணக்குகள்

இன்று அதிகமாக விவாகரத்துகள் முறையற்ற சொத்து பிரிப்பினால் இடம்பெற்று வருகின்றமையை நாம் அவதானிக்கலாம். இதனை நாம் காதீ நீதிமன்ற நீதிபதிகளின் கூற்றுகளினூடாக உறுதிப்படுத்தலாம்.

### 8.5 சொத்துடமையாளருக்கான பாதிப்பு

சொத்துடமையாளரின் மரணத்தின் முன்னரான சொத்துப் பிரிப்பினால் சிலவேளைகளில் சொத்துடமையாளனும் கூட பாதிக்கப்பட்டு விடுகின்றான். அதாவது வாரிசுரிமைச் சட்டமானது சொத்துரிமையாளரின் மரணத்தின் பின்னரே சொத்துக்கள் வாரிசுகளுக்கு மத்தியில் பகிரப்பட வேண்டும் என கூறுகின்றது. ஆனால் மரணத்திற்கு முன்னர் சொத்துக்களை பங்கீடு செய்யும்போது சொத்துரிமையாளர் சொத்துக்கள் அனைத்தையும் இழந்து தனது மகன் அல்லது மகளின் வீட்டில் தங்க வேண்டிய நிலைக்கு உட்பட்டு சில வேளைகளில் சொத்து வழங்கப்பட்ட பிள்ளைகளே அவர்களை தொந்தரவு என கருதி முதியோர் இல்லங்களில் கொண்டு போய் சேர்ப்பதையும் காணலாம். ஆயினும் சொத்துக்களை அவ்வாறு பிரித்துக் கொடுக்காது விட்டிருந்தால் இத்தகைய நிலையை அவர்கள் முகங்கொள்ள தேவையிராது.

### 8.6 அல்லாஹ்வின் தண்டனை

இஸ்லாத்தின் அடிப்படையில் சொத்துப் பங்கீடு செய்யாது விடுவதால் அல்லாஹ்வின் பாரிய தண்டனையை ஏற்க வேண்டி ஏற்படுகின்றது. இதனை அல்குர்ஆனில் அல்லாஹ் மிகவும் பயங்கரமான வசனங்களுக்கூடாக மிகவும் தெளிவாக விளக்கியுள்ளான்.

வாரிசுச் சொத்தைப் பகிர்ந்தளிக்கும் முழு அதிகாரமும் அல்லாஹ்வுக்கு மட்டுமே உண்டு. அதில் யாரும் தலையிடவோ கூடுதல் குறைதல் செய்யவோ முடியாது. அவ்வாறு செய்வது இறைவனின் சட்டமியற்றும் அதிகாரத்தில் பங்கெடுத்த ஷிர்க் குற்றத்தை செய்தவனாக கணிக்கச் செய்யும். அல்லாஹுதஆலா அல்குர்ஆனில் மூன்று இடங்களில் யார் அல்லாஹுதஆலா இறக்கியதைக்

கொண்டு தீர்ப்பு வழங்கவில்லையோ அவர்கள் காபிர்கள் என ஸுறா மாஇதாவின் 44வது வசனத்தில் குறிப்பிடுகின்றான்.

மேலும் வாரிசுச் சட்டத்தை தெளிவாக விளக்கிவிட்டு இதில் தவறும் பட்சத்தில் நிரந்தர நரக வேதனையை ஏற்க வேண்டும் என அல்குர்ஆன், அன்னிஸா 14வது வசனம் கூறுகின்றது.

இஸ்லாமிய அகீதாவின்படி ஈமான் கொண்ட ஒருவர் தனது பாவங்கள் காரணமாக தண்டனையை அனுபவித்து விட்டு அவன் சுவனம் நுழைவான் என்பது உண்மை. ஆனால் இங்கு வாரிசுரிமையை சரியாக பங்கிடாதவர் நிரந்தமாக நரகில் இருப்பதாக குறித்துக் காட்டப்பட்டுள்ளது. இது காபிர்களின் நிலையை ஒத்ததாக உள்ளது.

**9. முன்மொழிவுகள்**

களுத்துறை பிரதேசத்தில் இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்த பின்வரும் விதந்துரைகள் முன்வைக்கலாம்.

**9.1 முக்கியத்துவம் உணர்த்தப்படல்**

முதலில் இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தைப் பின்பற்றுவதன் அவசியம் களுத்துறை பிரதேச மக்களால் உணரப்பட வேண்டும். இதன் முக்கியத்துவம் அவர்கள் உணரப்படாமைக்கான முக்கிய காரணங்களாக இது பற்றிய தெளிவின்மை, அலட்சியம், பிரதேச மரபு என்பவற்றைக் கூறலாம். மேலும் பள்ளிவாசல்கள், பாடசாலைகள், மத்ரஸாக்கள், இஸ்லாமிய இயக்கங்கள் இது விடயத்தில் காத்திரமான பங்கை வழங்க முடியும். குறிப்பாக குர்ஆனின் அடிப்படையில் விதியாக்கப்பட்ட ஒரு கடமையே இது என்பதையும் உணர்த்த வேண்டும்.

**9.2 விழிப்புணர்வு நிகழ்வுகளை நடாத்தல்**

இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டம் பற்றிய விழிப்புணர்வு களுத்துறை பிரதேச முஸ்லிம் சமூகத்தில் ஏற்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியத் தேவையாக உள்ளது. இந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதனூடாக அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து நீங்கி சமூகத்தில் சிறந்ததொரு மாற்றத்தைக் கொண்டுவர முடியும். சமூகத்தில் வாரிசுரிமை பற்றிய தெளிவை மாணவர்கள், ஆசிரியர்கள், படித்தவர்கள், பாமரர்கள் என எல்லா மட்டத்திலும் துறைசார் உலமாக்கள், சட்டத்தரணிகள் இஸ்லாமிய ரீதியாக வழங்க வேண்டும். இஸ்லாமிய வாரிசுரிமை, வஸிய்யத், நன்கொடை பற்றிய தெளிவை வழங்குவதற்கென விழிப்புணர்வு நிகழ்ச்சிகளைப் பரவலாக செய்தல் சிறந்ததாகும்.

அத்துடன் ஆண் பிள்ளைகள் பொருளாதார வளம் மிக்கோராக இருக்க வேண்டியதன் தேவையை வலியுறுத்தி ஆண்களுக்கு சொத்துரிமை வழங்கப்பட வழிசெய்ய வேண்டும். அத்துடன் பர்ழான வாரிசுரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தாதோர் நிரந்தரமாக நரகில் தங்குவர் எனும் விடயத்தையும் புரிய வைத்தல் வேண்டும்.

**9.3 விசேட வகுப்புக்களை நடாத்தல்**

வாரிசுரிமை பற்றிய இஸ்லாமிய சட்டமும் செலவினம் பற்றிய சட்ட ஒழுங்கும் களுத்துறை பிரதேச முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் மிகப் பரவலாக விளக்கப்பட வேண்டும். இவ்விரு சட்டப் பகுதிகளும் குடும்பத்தின் நெருங்கிய உறவுக்கு காரணமாக அமைவதை சுட்டிக்காட்ட வேண்டும். பயான்

நிகழ்ச்சிகள், குத்பா பிரசங்கங்கள் என்பன மூலம் இதுபற்றிய தெளிவூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்தலாம். மேலும் ஆண்களுக்கு வேறாகவும் பெண்களுக்கு வேறாகவும் என விசேட அமைப்பொன்றை ஸ்தாபித்து இஸ்லாமிய வாரிசுரிமை சட்டம் பற்றிய விளக்கம் அளிக்கப்பட வேண்டும்.

**9.4 சொத்துரிமை தொடர்பான தவறான மனப்பதிவை அகற்றல்**

பாகப்பிரிவினை பற்றிய தவறான மனப்பதிவை களுத்துறை பிரதேச முஸ்லிம் சமூகத்திலிருந்து எடுத்தெறிவது மிக முக்கியமான ஒரு விடயமாகும். இதற்காக இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தின் அடிப்படையில் ஆணுக்கும் சொத்துண்டு பெண்ணுக்கும் சொத்துண்டு என்ற விடயம் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும். மேலும் வாரிசுரிமைக் கல்வியானது கணிதத்தோடு தொடர்புபட்டதாக இருப்பதால் அது கஷ்டம் என ஒதுங்குவோருக்கு எளிமையான முறையில் அதனை விளக்க வேண்டும்.

**9.5 முன்மாதிரி குடும்பங்களை உருவாக்கல்**

மார்க்கப் பொறுப்புதாரிகள் வாரிசுரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். செல்வாக்குள்ள அரசியல்வாதிகள், கல்விமான்களினூடாகவும் முஸ்லிம் சமூகத்திற்கு விசேடமாக இலங்கை முஸ்லிம் தனியார் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வழிவகை செய்தல் வேண்டும். இதற்காக இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஓர் செயற்றிட்டம் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். இதற்காக இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தை அமுல்படுத்தக்கூடிய முன்மாதிரி குடும்பங்கள் ஒருவாக்கப்பட்டு நடைமுறையில் அதனை பிரித்துக் காட்ட வேண்டும்.

**9.6 ஆலோசனைக் குழுக்களை நியமித்தல்**

வாரிசுரிமைச் சட்டம் பற்றிய விளக்கம் அளிப்பதற்கும் சிக்கலான நிலைமையில் தீர்வு வழங்குவதற்கும் ஆலோசனை குழுக்கள் ஒவ்வொரு மட்டத்திலிருந்தும் அமைக்கப்பட வேண்டும். மேலும் இது விடயத்தில் முஸ்லிம் சட்டத்தரணிகள், நொத்தாரிசுகள் முதலியோருக்கு விளக்கமளிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தலில் அவர்களது ஒத்துழைப்பைப் பெற வேண்டும்.

அத்துடன் சொத்து விடயத்தில் பிரச்சினைக்குள்ளானோரை கண்டு முஸ்லிம் தனியார் சட்டத்தோடு தொடர்பானோரின் உதவியுடன் அவர்களுக்கு விளக்கப்பட வேண்டும். காதி நீதிமன்றங்களில் சொத்து பிரிப்பு தொடர்பான பிரச்சினைகளினால் பிணக்குகளுடன் வாழும் தம்பதியினர் மத்தியில் சரியான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அவர்களுக்கான விசேட நிகழ்வுகளை இதற்காக ஒழுங்குபடுத்த வேண்டும்.

**9.7 சீதன ஒழிப்பு செயற்றிட்டத்தை மேற்கொள்ளல்**

எதிர்கால சந்ததியொன்றைக் கட்டியெழுப்பும் பாரியதொரு பொறுப்பு மிக்க நடவடிக்கையே திருமணம். இருவரும் ஒரு பெரும் அமானிதத்தையே சுமக்கிறார்கள் என்ற கருத்து திருமணம் முடிக்க இருப்பவர்களுக்கு விளக்கப்பட வேண்டும். இதனால் வீண் ஆடம்பரமும் கேளிக்கைகளும் திருமண நிகழ்வில் குறைவதோடு சீதனம் பற்றிய எண்ணமும் குறைவதற்கு வழிவகுக்கும். சீதனம் ஒரு பாவமான செயல், ஹராமான நடத்தை என்ற கருத்தை சமூக அபிப்பிராயமாக மாற்றலாம்.

இளைஞர்களின் பங்களிப்புடன் சீதன எதிர்ப்பு இயக்கத்தை உருவாக்கி அதன் மூலம் சீதன ஒழிப்பு செயற்றிட்டத்தை மேற்கொள்ள வேண்டும்.

### 9.8 முஸ்லிம்களை ஷரீஆ சட்டங்களின்படி வாழ வழிசெய்தல்

இஸ்லாமிய சட்டத்திற்கு மாற்றமான சட்டங்களையும் சம்பிரதாயங்களையும் பின்பற்றுவது பித்அத்தாகும். மார்க்கத்தில் இல்லாத ஒன்றை செய்த குற்றம் அத்தகைய மனிதனையே சாறும் என்ற விடயம் உணர்த்தப்பட வேண்டும். இஸ்லாத்திற்கு முரணான நடைமுறைகள், வழக்காறுகள் ஒழிக்கப்பட்டு இஸ்லாமியரீதியான வாழ்வை சமூகத்தில் ஏற்படுத்த வேண்டும். அத்துடன் முஸ்லிம்களது ஈமானை பலப்படுத்தி, ஆன்மீக சிந்தனையை கூட்டி, சுயநல சிந்தனைகளை நீக்கி, மார்க்கத்தோடு தொடர்பை கூட்ட வேண்டும். அத்துடன் முஸ்லிம்களை இஸ்லாத்தோடு இணைப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும்.

### 9.9 வாரிசுரிமைக் கல்வியை கீழ் மட்டத்திலிருந்து ஊட்டல்

அஹதிய்யா, பாடசாலைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் என எல்லா மட்டத்திலும் இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தின் முக்கியத்துவம் உணர்த்தப்பட வேண்டும். மேலும் சமூகத்தில் கீழ் மட்டத்தில் இருப்போருக்கும் சொத்துக்கள் இருக்கும். ஆனால் வாரிசுரிமை சட்டம் பற்றிய அறிவின்றி இருப்பர். அவர்களுக்கு அவர்களது தரத்தில் நின்றே விளக்க வேண்டும். அத்துடன் புத்தகங்கள் வாசிக்கும் அளவு கூட அறிவில்லாதோர் இருப்பர். அவர்களது மஹல்லாவை அடிப்படையாக வைத்து அவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வுகளை எளிய முறையில் ஒழுங்கமைக்க வேண்டும். அத்துடன் விசேட வகுப்புக்கள் பயிற்சி நெறிகள் மூலம் வயது வந்த ஆண்கள் பெண்களுக்கு இது பற்றி அறிவூட்டல் மிக முக்கியமானது.

## 10. கண்டறிந்தவை

களுத்துறை பிரதேச முஸ்லிம்களில் பலர் பெரும்பாலும் பல வகைகளிலும் இஸ்லாமிய சட்டத்தை மையமாகக் கொண்டதாக தமது வாழ்வை அமைத்துக் கொண்டாலும் சொத்துப் பங்கீடு தொடர்பில் விழிப்புணர்வற்றுக் காணப்படுகின்றனர். சமூகப் பொறுப்பு மிக்க தலைவர்கள் இது விடயத்தில் கரிசனை கொண்டு செயற்படுவதன் மூலம் சமூகத்தில் பாரியதொரு மாற்றத்தைக் கொண்டுவர முடியும்.

## 11. ஆய்வு முடிவு

இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டம் தொடர்பிலான அல்லாஹ்வின் வசனங்கள் தெளிவாக நிர்ணயிக்கப்பட்டனவாகவும் பாரதூரமானவையாகவும் இருந்தபோதிலும் அதன் அவசியம் ஆய்வுப் பிரதேசமாகிய களுத்துறை பிரதேச முஸ்லிம்களால் உணரப்படாமல் உள்ளது. மேற்கூறப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் முஸ்லிம் சமூகத்தை மாற்றுவதற்கான வழிவகைகளை செயற்படுத்துவதன் ஊடாக நிச்சயம் முஸ்லிம்களின் ஈமானை பலப்படுத்தி, அதனை செவ்வனே நடைமுறைப்படுத்துவதற்கான வழிகளை மேற்கொள்ளலாம். இதனால் முஸ்லிம் சமூகத்தில் மிகச் சிறந்ததொரு மாற்றத்தைக் கொண்டுவர முடியும் என்பதில் எத்தகைய சந்தேகமும் இல்லை.

**உசாத்துணைகள்**

1. அரபாத் கரீம். எம்.ஜே.எம்., (2012) **"இஸ்லாத்தில் வாரிசுரிமைச் சட்டம்",** பேருவளை: நதா பப்ளிகேஷன்.
2. அன்வாருத்தீன் பாகவி. ஏ., (1992) **"இஸ்லாம் இயம்பும் பாகப்பிரிவினை",** தஞ்சாவூர்: காஜியார் புக் டிப்போ.
3. அஸீஸ். ஏ.எம்.ஏ, (2007) **"இலங்கையில் இஸ்லாம்",** கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.
4. முஹம்மது இஸ்மாயில் உலவிய்யு. எஸ்.எம்.எச்., (1993) **"முஸ்லிம் வாரிசுரிமை சட்டம்",** சென்னை: அனஸ் புக் சென்டர்.
5. முஹம்மத் யூசுப் மிஸ்பாஹி. எம்.இ. (2013) **"இஸ்லாமிய வாரிசுரிமை சட்டங்கள்",** சென்னை: சாஜிதா புக் சென்டர்.
6. அரபாத் கரீம். எம்.ஜே.எம்., (2011) இஸ்லாமிய வாரிசுரிமை சட்டத்தின் பொருளாதார சிறப்பம்சம், **"இஸ்லாமிய சிந்தனை",** பேருவளை: நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டகம்.
7. தாஹிர் நிஹால்., (2012) இஸ்லாம் கூறும் பாகப்பிரிவினை, **"அல்ஹஸனாத்",** மலர்:38, இதழ்:05, கொழும்பு: இலங்கை ஜமாத்தே இஸ்லாமி.
8. நஜிமுதீன் முப்தி., (2015) **"வாரிசுரிமை சட்டம்",** (இணையம்), www.acmyc.com/index.php?page=media&file-id=2066, 2016.02.08.
9. மன்ஸூர். எம்.ஏ.எம்., (2012) **"Video Collection – Multor.xyztorrent",** (இணையம்), mutor.xyz/torrent/1537660/usthaz-mansoor-lectures-video-collection), 2016.02.06.
10. Ameen. A.H.G., (2005) **"Muslim Law of Succession – A Guide",** Colombo: Al Ameen Publishers.
11. Jaldeen.M.S., (1993) **"The Muslim Law of Succession Inheritance and Waqf",** Colombo: The Federation of Associations of Muslim Youth in Srilanka (FAMYS).
12. Muhammed Mustafa Khan., (2000) **"Islamic Law of Inheritance- a new approach",** New Delhi:Kitab Bhavan.

**நேர்காணல்கள்**

1. அரபாத் கரீம். எம்.ஜே.எம்., (விரிவுரையாளர்), 2017.01.08, நேரம்: பி.ப 6.30-7.30, பேருவளை.
2. அனஸ். எம்., (ஆசிரியர்), 2017.02.06, நேரம்: பி.ப 4.00-5.00, பேருவளை.
3. ஆயிஷா. எம்.எஸ்., 2017.01.25, நேரம்: மு.ப 10.00-11.30, தர்கா நகர்.
4. மிர்ஸாக். எம்., (பேருவளை பிரதேச காதி நீதிபதி), 2016.10.01, நேரம்: 1.00-2.00, மக்கொனை.
5. ஸமீனா. எப்., 2017.03.25, நேரம்: மு.ப 10.00-11.00, களுத்துறை.
6. ஸஸ்னா. ஏ.எல்.எப்., 2017.04.10, நேரம்: பி.ப 5.00-7.00, களுத்துறை.